بسم الله الرحمن الرحیم — نحمدہ ونصلی علی رسولہ الکریم — وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 4 | இதழ் 20

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

10 ரமஜான் 1440 ஹிஜ்ரி கமரி 16 ஹிஜ்ரத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
16 மே 2019


## அல்லாஹ்வின் கட்டளை

مَا كَانَ لِبَشَرٍ اَنْ يُّؤْتِيَهُ اللّٰهُ الْكِتٰبَ وَالْحُكْمَ وَالنُّبُوَّةَ ثُمَّ يَقُوْلَ لِلنَّاسِ كُوْنُوْا عِبَادًا لِّيْ مِنْ دُوْنِ اللّٰهِ وَلٰكِنْ كُوْنُوْا رَبّٰنِيّٖنَ بِمَا كُنْتُمْ تُعَلِّمُوْنَ الْكِتٰبَ وَبِمَا كُنْتُمْ تَدْرُسُوْنَ ۝

(உண்மையான) ஒரு மனிதனுக்கு அல்லாஹ் வேதத்தையும், ஆட்சியையும், நபித்துவத்தையும் வழங்கிய பின்னர் அவன் மக்களிடத்தில் நீங்கள் அல்லாஹ்வை விட்டுவிட்டு என்னுடைய அடியார்களாகி விடுங்கள் என்று கூறுதல் தகுந்ததன்று. ஆனால் (அவர்) நீங்கள் (இறை) வேதத்தைக் கற்பிப்பதாலும், அதனைக் கற்பதனாலும் நீங்கள் இறைவனுக்கு உரியவர்களாக ஆகி விடுங்கள் (என்பார்). (3:80)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்தக் கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்போடு தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெற்றவர்களின் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

இந்த அன்பின் நிலை மற்றும் அல்லாஹ்வுடன் அன்னார் நடந்து கொண்ட முறை மற்றும் அருட்களின் மழை தொடர்பாக எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

ஒரு முறை இல்ஹாம் வந்தது. அதன் பொருள் என்னவென்றால், இறைவனது விருப்பம் மார்க்கத்தை உயிர்ப்பிப்பதற்காக ஆர்வமுடன் இருந்தது... அப்போது நான் கனவில் பார்த்தேன். மக்கள் ஒரு வழிகாட்டியை தேடிக் கொண்டிருக்கின்றனர். மேலும் ஒரு நபர் என் முன்னால் வந்து, இந்த நபர் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்திருக்கின்றார் என்று கூறினார்.

மேலும் இந்தக் கூற்றின் பொருள் என்னவென்றால், இந்த பொறுப்பை அடையவதற்கு முதன்மையான நிபந்தனையானது பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதாகும். அது இந்த நபரிடம் காணப்படுகிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் காரணமாக இந்த அந்தஸ்தை எனக்கு வழங்கினான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பர், இஸ்லாத்தை உயிர்ப்பிப்பதற்காக அனுப்பப்பட்ட இந்த அடியாரின் கூற்றைச் செவிமடுத்து முஸ்லிம்களும், ஆலிம்களும் அன்னாருக்கு உதவி செய்திருக்க வேண்டும். ஆனால் இந்த பெயர் தாங்கிய ஆலிம்கள் தமது கடுமை மற்றும் அறியாமையின் காரணமாக, அன்னார் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணித்தை குறைக்கக் கூடியவர்கள் (நஊதுபில்லாஹ்) என்று ஆட்சேபணை செய்கின்றனர். இன்று வரை செய்து வருகின்றனர். ஆனால் இதற்கு நேர்மாற்றமாக நாம் அன்னார் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவேர்கள் மீது கொண்டிருந்த எண்ணற்ற மேற்கோள்களை நம்மால் பார்க்க முடிகிறது.

அரபி, ஃபார்ஸி மற்றும் உருது மொழியில் அன்னாரது நூல்கள் மற்றும் கூற்றுகள் மற்றும் கவிதை வரிகளைப் பார்க்கின்றோம். அதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால், அன்னார் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் அந்தஸ்தை எவரும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ரஸூலின் மீது தம்மை மாய்த்துக் கொண்டதற்கான ஆதாரமாகும்.

மேலும் இந்த விஷயங்களை நல்ல இயல்பைக் கொண்ட ஆலிம்கள் மற்றும் சாதாரண முஸ்லிம்கள் மீது வெளிப்படும்போது அன்னாரது அடிமைத்துவத்தில் வந்து விடுகின்றனர். இவ்வாறு அவர்கள் உண்மையான முறையில் பெருமானார் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்து விடுகின்றனர்.

அன்னார் தமது ஓர் கவிதையில் கூறுகின்றார்கள்: நான் இறைவனுக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மீதான அன்பில் மூழ்கியுள்ளேன். இறைவன் மீதும், அவனது தூதர் மீதும் அன்பு கொள்வது குஃப்ர் என்றால், இறைவன் மீது ஆணையாக! நானே மிகப் பெரிய காஃபிராவேன்.

இவ்வாறே அன்னாரது அரபி எழுத்துக்களும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. அன்னார் எத்தகைய கவிதைகளை எழுதியுள்ளார்கள் என்றால் இதற்கு முன்னர் எவரும் படித்ததும் கிடையாது. கேட்டதும் கிடையாது.

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஷஹீது அல்லாஹ்விடத்தில் சென்று சுதந்திரமாக சுற்றித் திரிகின்றார்**

**ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்தில் முன்ஸிர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ....நான் சுவர்க்கத்தில் இருக்கின்றேன். மேலும் எங்கு விரும்புகின்றோமோ அங்கு சுவர்க்கத்தில் உண்ணுகின்றோம்; பருகுகின்றோம். அதற்கு நான், நீங்கள் பத்ர் போரில் ஷஹீதாகவில்லையா? என்று கேட்டேன். அதற்கு அன்னார், ஏனில்லை! ஆனால் எனக்கு உயிர் கொடுக்கப்பட்டது என்று கூறினேன். இந்த கனவை அன்னார் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அபூ ஜாபிரே! இதுவே ஷஹாதத் ஆகும் என்று கூறினார்கள்**

**பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கொலை செய்வது போன்ற எந்த நோக்கமும் இருந்ததில்லை**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் ஹுஸைன் பின் ஹாரிஸ் (ரலி), ஹஸ்ரத் சஃப்வான் (ரலி), ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்தில் முன்ஸிர் (ரலி), ஹஸ்ரத் வராக்கா பின் இயாஸ் (ரலி), ஹஸ்ரத் முஹ்ஸிர் பின் நஸ்லா மற்றும் ஹஸ்ரத் சுவைத் பின் சஅது (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**அல்லாஹ் தனது நபிமார்களிடத்தில் இறையறிவிப்பைக் கட்டளையாக அருளி அதனை செய்யுமாறு கூறினால் அதன் பொருள் என்னவென்றால், அல்லாஹ் அதற்காகத் தமது உதவிகளையும், ஆதரவையும் வழங்குவான். மேலும் அதற்கான ஏற்பாட்டையும் செய்வான். பிறகு அந்தப் பணி முழுமையடையும் என்பதே ஆகும். மேலும் இதுவே எனது அனுபவமும் ஆகும்**

**நாம் முன்னெடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் அல்லது நாம் பார்க்கின்ற ஒவ்வொரு முன்னேற்றமும், அல்லாஹ் இஸ்லாத்தை முழு உலகிலும் பரப்புவதற்காக ஆயத்தப்படுத்தியுள்ள அந்த திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்.**

**எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. மேலும் மற்ற விஷயங்களும் இதனை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இங்கு (இஸ்லாமாபாதில்) முறையாகத் தலைமையகத்தை நிறுவுவதற்கான எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள்**

**அல்லாஹ் இஸ்லாமாபாதிலிருந்து இஸ்லாத்தின் தப்லீக் பணியை முன்பை விட அதிகமாக பரப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக. மேலும் வஸ்ஸிஹ் மகானக்க என்ற இல்ஹாம் கட்டிடங்களின் விரிவாக்கம் செய்யப்படுவதுடன் மட்டுமல்லாமல் அல்லாஹ்வின் திட்டங்களை முழுமை செய்வதற்காகவும் வழியாக அமையட்டுமாக**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாமான வஸ்ஸிஹ் மகானக்க என்றபதற்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத்தின் புதிய தலைமையகம் இஸ்லாமாபாத்திற்கு மாற்றப்பட்டது தொடர்பான அறிவிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 12 ஏப்ரல் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **12 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் கூறவிருக்கிற பத்ர் போர் சஹாபாக்களில் முதலாவது **ஹஸ்ரத் ஹுஸைன் பின் ஹாரிஸ்** (ரயீல) உடையதாகும். ஹஸ்ரத் ஹுஸைன் உடைய தாயார் சுஹைலா பின்த் கஸாயி ஆகும். இவர் பனூ முத்தலிப் பின் அப்தே மனாஃப் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் தமது இரு சகோதரர்களான துஃபைல் மற்றும் அபூ உபைதா உடன் சேர்ந்து மதீனாவுக்கு இடம் பெயர்ந்தார்கள். இவர்களுடன் மிஸ்தா பின் உஸாஸா மற்றும் அப்பாத் பின் முத்தலிஃப் ஆகியோரும் இருந்தனர். மதீனாவில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாமா அஜ்லானீ வீட்டில் தங்கினார்கள்.

அறிவிப்பின்படி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைன் மற்றும் அப்துல்லாஹ் பின் ஸுபைர் இருவருக்கும் இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். முஹம்மது பின் இஸ்ஹாக் உடைய அறிவிப்பு இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் ஹுஸைன் பத்ர், உஹது உட்பட எல்லா போர்களிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார். ஹஸ்ரத் ஹுஸைன் ஹஸ்ரத் துஃபைல் இருவரும் கூட பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். இவரது மரணம் ஹிஜ்ரி 32 –ல் ஏற்பட்டது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 30 ஹுஸைன் பின் ஹாரிஸ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அல்இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 141 உபைதா பின் ஹாஸிஸ் (ரலி) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 573 ஹுஸைன் பின் ஹாரிஸ் பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹுஸைன் உடைய மகன் பெயர் அப்துல்லாஹ். மகள்கள் கதீஜா மற்றும் ஹிந்த் ஆவர். அவர்களும் இஸ்லாத்தை ஏற்றிருந்தனர். கைபர் போரின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருவருக்கும் நூறு வஸக் தானியம் வழங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 30 ஹுஸைன் பின் ஹாரிஸ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஒரு வஸக் என்பது 60 சாஹ் ஆகும். ஒரு சாஹ் என்பது இரண்டரை வஸக்கிற்கு சமமானது அல்லது சிறிது குறைவாக இருக்கும். இவ்வாறு 375 மன் அளவு தானியம் வழங்கினார்கள்.

(லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 4 பக்கம் 487 சஸக் தொகுதி 2 பக்கம் 648 சாஹ் – 2005 ஆம் ஆண்டு லாஹூரில் குதுப் ஹானாவில் அச்சிடப்பட்டது)

இரண்டாவது சஹாபி ***ஹஸ்ரத் சப்வான் (ரலி)***. இவர்களுடைய தந்தையார் பெயர் வஹாப் பின் ரபிஆ ஆகும். ஹஸ்ரத் சப்வான் உடைய சுட்டுப்பெயர் அபூ அம்ர் ஆகும். இவர் பனூ ஹாரிஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவரது தந்தையார் பெயர் வஹப் பின் ரபிஆ ஆகும். இவரது பெயர் ஓர் அறிவிப்பில் உஹைப் என்றும் வருகிறது. இவரது தாயார் பெயர் தாது பின் ஹஜ்தம் ஆகும். இவர் பைஸா என்ற பெயரால் பிரபல்யமாக இருந்தார். இதனால் சப்வானை இப்னி பைஸா என்றும் கூறப்படுகிறது.

இவர் ஹஸ்ரத் ஸஹல் மற்றும் ஸுஹைல் உடைய சகோதரர் ஆவார். இருவர் தவிர இவரும் ஒரு சகோதரர் ஆவார். இவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது நபவியின் நிலத்தை வாங்கிய ஸஹல் மற்றும் ஸுஹைல் அல்ல. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சப்வானை ராஃபி பின் முஅல்லாவுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். ஓர் அறிவிப்பின்படி ரபி பின் அஜ்லான் உடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். இவரது மரணம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. சிலர் ஹஸ்ரத் சப்வானை ஃபஜ்ர் போரில் தாமா பின் அதி ஷஹீதாக்கினார் என்றும் ஓர் அறிவிப்பின்படி பத்ர் போரில் இவர் ஷஹீதாகவில்லை.

மாறாக பத்ர் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார் என்று வருகிறது. ஹஸ்ரத் சப்வான் பற்றி ஓர் அறிவிப்பில் வருகிறது. இவர் பத்ர் போருக்கும் பிறகு மக்காவுக்கு திரும்பிச் சென்றார். சில காலம் கழித்து மீண்டும் இடம் பெயர்ந்து மதீனா சென்றார். அறிவிப்புகளில் இவ்வாறும் காணப்படுகிறது. இவர் மக்கா வெற்றி வரை மக்காவில் இருந்தார்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஸ் உடன் சென்ற குழுவுடன் அப்ஸாவுக்கு அனுப்பி வைத்தார்கள். சிலரது அறிவிப்பின்படி இவரது மரணம் ஹிஜ்ரி 18 –ல் நடந்தது. ஹிஜ்ரி 30 என்றும் ஹிஜ்ரி 38 என்றும் வருகிறது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 318 சஃப்வான் பின் வஹப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 33 சஃப்வான் பின் வஹப் பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 358–359 சஃப்வான் பின் வஹப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இவர் பத்ர் சஹாபிகளில் ஒருவர் ஆவார் என்று எல்லா வகையிலும் நிரூபணம் ஆகியுள்ளது.

அடுத்த சஹாபி ***முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர்*** ஆவார். ஹஸ்ரத் முபஷ்ஷிர் உடைய தந்தை பெயர் அப்துல் முன்ஸிர். அவரது தாயார் பெயர் நஸிபா பின்த் ஸைது ஆகும். இவர் அவ்ஸின் ஒரு பிரிவான பனூ அம்ர் பின் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸருக்கு ஹஸ்ரத் ஆக்கில் பின் அபூ புகைர் உடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள்.

சிலர், ஹஸ்ரத் அக்கில் பின் அபூ புகைர் (ரலி) மற்றும் முஜஸ்ஸிர் பின் ஸியாது இருவருக்கும் இடையில் சகோதரத்துவம் ஏற்படுத்தியதாக கூறுகின்றனர். எவ்வாறிருப்பனும், இவர் பத்ர் சஹாபிகளில் ஒருவர் ஆவார். அதே போரில் ஷஹீதும் ஆனார்.

ஹஸ்ரத் ஸாயில் பின் அபூ லுபாபா என்ற ஹஸ்ரத் முபஷ்ஷிர் உடைய சகோதரரும் அபூ லுபாபாவின் மகன் ஆஸைஹாயியிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிருக்கு போர்ப் பொருட்களில் பங்கு நிர்ணித்தார்கள். நுஃமான் பின் அதி அதனை வாங்கிக் கொண்டு வந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 3248,347 முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

சகோதரர் மற்றும் சகோதரரின் மகனுக்குப் பங்கு கிடைக்கிறது. மதீனா ஹிஜ்ரத்தின் போது இடம் பெயர்ந்தவர்களில் அபூ ஸலமா பின் அப்துல் அஸத் மற்றும் ஆமிர் பின் ரபிஆ ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவரது சகோதரர் அபூ ஹம்து பின் ஜஹ்ஷ் ஆகியோர் கபா என்ற இடத்தில் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிரிடம் தங்கினார்கள். இடம் பெயர்ந்து கால்நடையாக வந்தவர்கள் அவரிடம் வந்தனர்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 335 ஸிக்ருல் முஹாஜிரீன இலல் மதீனத்தி – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர் மற்றும் அவரது இரு சகோதரர்களான அபூ லுபாபா பின் அப்துல் முன்ஸிர் மற்றும் ரிபா பின் அப்துல் முன்ஸிர் உடன் பத்ர் போரில் பங்கு பெற்றார். ஹஸ்ரத் ரிபா பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்ட 70 அன்ஸார்களள் ஒருவர் ஆவார். அதுபோன்று பத்ர் மற்றும் உஹது போர்களிலும் கலந்து கொண்டார். உஹது போரில் ஷஹீதானார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ருக்கு புறப்பட்டபோது ஹஸ்ரத் லுபாபாவை மதீனாவின் அமீர் ஆக்கி ரவ்ஹா என்ற இடத்திலிருந்து திரும்ப அனுப்பினார்கள். இதுபற்றி முன்னரும் கூறப்பட்டது. மதீனாவிலிருந்து 40 மைல் தூரத்திலுள்ள ஓரிடம் ரவ்ஹா ஆகும். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்கும் போர்ப் பொருட்களிலிருந்து பங்கு நிர்ணயித்தார்கள்.

அல்லாமா இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்: முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர் பனூ அம்ர் பின் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ரில் ஷஹீதான அன்ஸாரி சஹாபாக்களுள் ஒருவராவார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர் பக்கம் 241 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர் பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 2 பக்கம் 149)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஹராம் அறிவிக்கிறார். நான் உஹது போருக்குப் பின் கனவில் கண்டேன். ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர் என்னிடம் கூறுகின்றார். சில நாட்களுக்குள் நீர் எம்மிடம் வந்து விடுவீர். அப்போது நான் அவரிடம், நீர் எங்கு இருக்கிறீர்? என்று கேட்டேன்.

அதற்கு அவர், நான் ஜன்னத்தில் இருக்கிறேன். ஜன்னத்தில் விரும்புவதை உண்கிறேன்; குடிக்கிறேன் என்றார். நான் அவரிடம், நீங்கள் பத்ரில் ஷஹீதாகி விடவில்லையா? என்றேன்.

அவர், ஏன் இல்லை? எனக்கு மீண்டும் உயிரூட்டப்பட்டுள்ளது என்றார். அந்த சஹாபி இந்தக் கனவை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், அபூ ஜாபிரே! ஷஹாதத் என்பது அதுதான்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் சஹ்யைன் தொகுதி 5 பக்கம் 1840,1841)

ஷஹீதானவர் அல்லாஹ்விடம் சென்ற பிறகு சுதந்திரமாக சுற்றித் திரிகிறார் என்றார்கள்.

ஹஸ்ரத் அல்லாமா சுர்கானி பத்ரில் ஷஹீதான சஹாபிகள் பற்றி கூறுகிறார்கள்: இரண்டு சஹாபிகள் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்றும் சிலர் அம்ர் பின் அப்தே ஊது ஷஹீதாக்கினார் என்றும் கூறுகின்றனர். சம்பூதி தமது நூலில் எழுதுகின்றார். பத்ர் போரில் ஷஹீதான சஹாபாக்களில் ஹஸ்ரத் உபைதா தவிர மற்ற அனைவரும் பத்ர் களத்தில் அடக்கம் செய்யப்பட்டனர். ஹஸ்ரத் உபைதா சில காலம் கழித்து வஃபாத் ஆனதால் ஸப்ரா அல்லது ரவ்ஹா என்ற இடத்தில் அடக்ம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் இப்னு மஸ்வூது அறிவிக்கிறார்: நிச்சயமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களுள் பத்ரில் ஷஹீதாக்கப்பட்டவர்களில் ஆன்மாக்களை பச்சை பறவைகளிடம் வைப்பான். அவர்கள் ஜன்னத்தில் உண்பர்; குடிப்பர். அதே நிலையில் இருக்கும் அவர்களுடன் அவர்களின் இறைவன் திடீரென்று ஒருநாள் அவர்கள் முன்தோன்றி, எனது அடியார்களே! நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்? என்று கேட்பான்.

அவர்கள், இந்த ஜன்னத்தை விட வேறு ஏதாவது உள்ளதா? என்பர். அல்லாஹ் மீண்டும் அவர்களிடம், உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்பான். இவ்வாறு நான்காம் முறை கேட்டதும் அவர்கள், எமது ஆன்மாவை எமது உடலுக்கு மீண்டும் திருப்பி அனுப்புவாயாக. அதன் மூலம் நாங்கள் முன்னர் ஷஹீதாக்கப்பட்டபோன்று மீண்டும் ஷஹீதாக்கப்படுவதற்காக அவ்வாறு செய்வாயாக என்பர்.

(ஷரஹுல் அலாமா அஸ் ஸர்கானி பக்கம் 327, பாப் கஸ்வத்துல் பத்ர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறகு அடுத்த சஹாபி **ஹஸ்ரத் வரக்கா பின் இயாஸ்** உடையதாகும். ஹஸ்ரத் வரக்காவின் பெயர் பற்றி கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. வரக்கா என்ற பெயருடன் வத்ஹா மற்றும் வத்கா என்றும் வந்துள்ளது. ஹஸ்ரத் வரக்காவின் தந்தை பெயர் இயாஸ் பின் அம்ர் ஆகும். இவர் அன்ஸார்களின் கஸ்ரஜ் உடைய கிளையான பனூ லுதான் பின் கனம் உடைய கோத்திரத்தைச் சார்ந்தவர். அல்லாமா இப்னு இஸ்ஹாக் உடைய அறிவிப்பிற்கிணங்க ஹஸ்ரத் வரக்காவின் இரு சகோதரர்கள் ரபில், ஹஸ்ரத் அம்ருடன் பத்ர் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் வரக்காவுக்கு பத்ர் போர் தவிர உஹது போர், அகழ் போர்களிலும் மற்ற எல்லா போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இவரது ஷஹாதத் யமாமா போரின் நாளில் ஹஸ்ரத் அபூபக்கருடைய கிலாஃபத் காலத்தில் ஹிஜ்ரி 11–ல் நடந்தது.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 412,413 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 6 பக்கம் 471 வரக்கா பின் இயாஸ் பின் அம்ர் அன்ஸாரி – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 469 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி **ஹஸ்ரத் முஹர்ரிஷ் பின் நஸ்லஹ்** ஆவார். இவரது தந்தையார் நுஸ்லஹ் பின் அப்துல்லாஹ் ஆவார். இன்னொரு கூற்றின்படி இவரது தந்தையார் பெயர் வஹப் ஆகும். இவரது சுட்டுப்பெயர் அபூ நுஸ்லஹ் ஆகும். இவர் நல்ல வெள்ளை நிறமும் அழகிய முக அமைப்பும் கொண்டவர். இவரது பட்டம் குஹைரா ஆகும். இவர் அக்ரப் என்ற பெயராலும் அழைக்கப்பட்டார். இவர் பனூ அப்தே ஷம்ஸின் நட்பு கோத்திரத்தைச் சார்ந்தவர்.

சிலர் பனூ அப்தே அஷ்ஹல் இவரது நட்புக் கோத்திரம் என்றும் கூறுகின்றனர். ஹஸ்ரத் முஹர்ரிஸ் மற்றும் அக்ரப் இரு பெயர்கள் உண்டு. இவர் மக்காவின் பனூ கனம் பின் தவ்தான் கோத்திரத்தைச் சார்ந்தவர். இந்தக் கோத்திரம் முஸ்லிம் ஆனது. இந்தக் கோத்திரத்தின் ஆண் பெண் அனைவரும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்ய வாய்ப்பு பெற்றிருந்தனர். அவர்களுள் முஹர்ரிஷ் பின் நஸ்லஹ்வும் அடங்குவர்.

வாகிஇ கூறுகிறார்: இப்ராஹீம் பின் இஸ்மாயீல் கூறக் கேட்டேன். ஸரஷ் நாளில் அல்லது ஸிகரஸ் போரில் அதாவது ஹிஜ்ரி 6 –ம் ஆண்டு நடந்த போரில் ஹஸ்ரத் முஹர்ரிஷ் பின் நஸ்லஹ்வைத் தவிர பனூ அப்துல் அஸீஸ் உடைய வீட்டில் வேறு எவரும் வெளியே வரவில்லை. ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா ஒரு குதிரையில் சென்று கொண்டிருந்தார். அதன் பெயர் துல்லமா ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஹர்ரஸ் பின் நஸ்லஹ்வுக்கும் உமாரா பின் ஹஸ்முக்கும் இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். இவர் பத்ர் போர், உஹது போர், அகழ் போர் ஆகியவற்றில் கலந்து கொண்டார்.

ஸாலிஹ் பின் வாகிஇ அவர்களின் கருத்தின்படி ஸாலிஹ் பின் கைஸ்ஸானிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. முஹர்ரிஸ் பின் நஸ்லஹ் கூறினார்கள்: நான் கனவில் அடிவானத்தைப் பார்த்தேன். அது எனக்காகத் திறக்கப்பட்டது. நான் அதில் நுழைந்து விட்டேன். அதிலிருந்து ஏழாம் வானம் வரை சென்று விட்டேன். பிறகு ஸித்ரத்துல் முன்தஹா வரை சென்று விட்டேன். அங்கு என்னிடம் இதுதான் உமது இலக்காகும் என்று கூறப்பட்டது.

முஅர்ரிஸ் கூறுகிறார்: நான் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் இடம் சென்று கனவை விளக்கினேன். அன்னார் கனவின் விளக்கம் கூறுவதில் நிபுணராக இருந்தார்கள். அவர்கள் என்னிடம், உமக்கு ஷஹாதத்தின் நற்செய்தியாகும் என்றார்கள். பிறகு ஒருநாள் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஸரஹ் உடைய நாளில் கஅபா என்ற இடத்திற்குச் சென்றார். இதனை ஸகரஸ் போர் என்றும் கூறப்பட்டது. இது ஹிஜ்ரி 6 –ம் ஆண்டு நடந்தது.

உமர் பின் உஸ்மான் இயாசி அறிவிக்கிறார்: முஅர்ரிஸ் பின் நஸ்லஹ் பத்ர் போரில் கலந்து கொண்டார். அப்போது அவருக்கு 31 அல்லது 32 வயது இருக்கும். அவர் ஷஹீதானபோது 37 அல்லது 38 வயது இருக்கும்.

(அத்தப்காத்துல் குப்ரா அல்ஜுஸ்வுஸ் சாலிஸ் பக்கம் 52 பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா பக்கம் 68 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஹர்ரிஷ் உடைய ஷஹாதத் சம்பவம் இவ்வாறு கூறப்படுகிறது. ஹஸ்ரத் அயாஸ் பின் ஸல்மா அவர்கள் ஸிகரஸ் போர் பற்றி கூறுகிறார். எனது தந்தை என்னிடம் கூறினார். ஹுதைபிய்யா நிகழ்ச்சிக்குப் பிறகு நாங்கள் மதீனாவுக்கு திரும்புவதற்காக வெளிப்பட்டபோது நாங்கள் ஓரிடத்தில் தங்கினோம். எங்களுக்கும் பனூ லிஹ்னானுக்கும் இடையில் ஒரு மலை இருந்தது. அவர்களோ இணை வைப்பவர்களாவர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த மலையில் இரவு நேரம் ஏறி, ரஸூலுல்லாஹ் மற்றும்

சஹாபாக்களுக்காக அப்பகுதியை நோட்டமிடவும் எதிரிகள் தாக்க வராமல் இருக்க பாதுகாப்பு நோக்கில் உளவு பார்க்கவும் நிறுத்தப்பட்ட அம்மக்களின் மன்னிப்புக்காக துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் சல்மா பின் அக்வா கூறுகிறார்: நான் அந்த இரவில் **2–3** முறை அம்மலையில் ஏறினேன். பிறகு மதீனா வந்து சேர்ந்தோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ரபஅ என்ற பெயருள்ள அடிமையிடம் ஒட்டகம் அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமையும் எனது அடிமையும் நானும் தல்ஹாவின் குதிரையின் மீது ஏறி வெளியில் வந்தோம்.

நான் ஒட்டகங்களுடன் சேர்த்து அக்குதிரையை தண்ணீர் புகட்டச் சென்றோம். விடிந்ததும் அப்துர் ரஹ்மான் பஸாரி என்பவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய ஒட்டகத்தின் மீது ஏறி தாக்குதல் தொடுத்தார். ஒரு வகை கோத்திரமும் அத்துடன் இருந்தார்கள். கால்நடைகளை குரல் கொடுத்து அனைத்தையும் கூட்டிச் சென்றார். அதன் மேய்ப்பர்களை வெட்டினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் கூறினேன். ரபா ஒரு குதிரையைப் பிடி. தல்ஹா பின் உபைதுல்லாவிடம் கொண்டு சேர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு செய்தி சேர்த்து விடு. இணை வைப்பவர்கள் அன்னாரது கால்நடைகளை களவாடிச் சென்று விட்டனர். பிறகு நான் மதீனாவின் பக்கம் திரும்பி ஒரு மேட்டின் மீது நின்றவாறு, யா சுபாஹா! யா சுபாஹா! என்று குரல் கொடுத்தேன்.

இந்த வார்த்தை அரபிகளிடம் எதிரிகள் மற்றும் களவாடுபவர்கள் நம்மை நெருங்கும் கால வேளையில் கூறப்படும். அத்துடன் முரசு கொட்டட்டும். அல்லது உரத்த குரலில் உதவி கோரட்டும். அதனை கேட்டு உதவி செய்யக்கூடியவர்கள் உடனே வந்து அவர்களை எதிர்க்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யப்படும்.

சிலர் கூறுகிறார்கள்: சண்டை இடுபவர்களுக்கு ஒரு வரைமுறை இருந்தது. அவர்கள் இரவில் சண்டையை நிறுத்தி விட்டு தமது தங்குமிடத்திற்குச் சென்று விடுவர். பிறகு சுபாஹா பற்றி இன்னோர் அறிவிப்பில் வருகிறது. சுபாஹா! என்று கூறி மறுநாள் சண்டைக்காக மக்களை அழைக்கப்படும். விடிந்து விட்டது; தயாராகுங்கள் என்று பொருளாகும். ஹதீஸின் சொற்பொருள் அகராதியில் இது கூறப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுகிறார்: நான் அவர்களின் பின்னால் அம்பை வீசியவாறு பின்தொடர்ந்து சென்றேன். நான் ஒரு போர் பாடலைப் பாடிக் கொண்டு சென்றேன். அனப்னு அக்வாயி யவ்மு யவ்மர்ரஸ்ஸா. நான் அக்வாவின் மகனாவேன். இந்நாள் இழிந்தவர்களுக்கு அழிவு நாளாகும் என்று கூறிக் கொண்டே சென்றேன். நான் எவரை சந்தித்தாலும் அவர் மீது அம்பு எய்தேன். அந்த அம்பு வெளிப்பட்டு அவர்களின் தோள்களை சென்றடைந்தது. அனப்னு அக்வாயி யவ்மு யவ்மர்ரஸ்ஸா. நான் அக்வாவின் மகன். இந்த நாள் இழிந்தவர்களின் அழிவின் நாளாகும் என்று கூறிக் கொண்டே சென்றேன்.

அவர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அம்புகளை விட்டுக் கொண்டே அவர்களை காயமுறச் செய்து கொண்டே சென்றேன். என் முன் குதிரையில் எவராவது வந்தால் நான் ஏதாவது மரத்தின் கீழே சென்று அமர்ந்து கொள்வேன். அங்கிருந்து அம்பு விட்டு அவரை காயமுறச் செய்வேன். இவ்வாறு முன்னேறிச் செல்லச் செல்ல மலை வழிப்பாதை குறுகலாகிக் கொண்டே சென்றது. அந்த குறுகிய வழியில் நுழைந்து அம்மலை மீது ஏறி கல்லை வீசினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கால்நடைகளை களவாடிச் சென்றவர்கள் மீது தனித்து நின்று தாக்குதல் தொடுத்துக் கொண்டே சென்றார். வழியில் அம்பு எய்து கொண்டு சென்ற பிறகு மலை மீது ஏறி அவர்கள் மீது கற்களை வீசி தாக்கினார்.

அவர் கூறுகிறார்: இவ்வாறு நான் அவர்களின் பின்னால் சென்றேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய ஒட்டகங்களில் ஓர் ஒட்டகத்தையும் அல்லாஹ் பின் தங்க விட்டுச் செல்லுமாறு செய்யவில்லை. குறுகிய பாதை என்பதால் அவர்கள் பின்தங்கி விட்டார்கள். ஆனால் முன்னே வந்தவர்களாகிய அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் இருந்தவர்கள் மீது நான் அம்பு வீசினேன். அவர்கள் தமது முப்பதுக்கும் அதிகமான போர்வைகளையும் முப்பது ஈட்டிகளையும் ஆகியவற்றை பாரத்தை குறைக்கும் பொருட்டு வீசி விட்டு சென்று விட்டனர்.

அவர்கள் ஓடுவதால் தமது பொருள்களை பின்னால் விட்டு விட்டு ஓடினர். எளிதாக ஓடுவதற்காக அவ்வாறு செய்தனர். அவர்கள் வீசி விட்டுச் சென்ற இடங்களில் நான் அடையாளத்திற்க கல்லை வைத்துக் கொண்டே சென்றேன். அதன் மூலம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சஹாபாக்கள் அடையாளம் காண்பதற்காக அவ்வாறு செய்தேன். இந்நிலையில் ஒரு குறுகலான மலை அடிவாரத்தில் பத்ர் பஸாரியின் மகன் அவர்களை சந்தித்தான். அமர்ந்து உணவு உண்டார்கள். நான் ஒரு முகட்டில் அமர்ந்திருந்தேன்.

பஸாரி கூறினார்: நான் எவரை பார்க்கிறேன். அந்த மனிதர் நம்மை மிகவும் கஷ்டப்படுத்தி விட்டார். அவர் காலையில் இருந்து நம்மீது அம்பு விட்டுக் கொண்டே இருக்கிறார். எந்த அளவுக்கு என்றால் அவர் நம்மிடமிருந்து எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு சென்று விட்டார். உங்களில் நான்கு பேர் செல்லுங்கள் என்றார்.

ஸல்மா பின் அக்வா கூறுகிறார்: என் பக்கம் நான்கு பேர் வந்தனர். என்னை எவ்வளவு நெருங்கி விட்டனர் என்றால் என்னால் அவர்களுடன் பேச முடிந்தது. நான் அவர்களிடம், என்னை உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டேன். அவர்கள், தெரியாது; நீ யார்? என்றனர். நான் ஸல்மா பின் அக்வா என்றேன்.

மேலும் அவர் காஃபிர்களிடம் கூறினார்: முஹம்மது (ஸல்) அவர்களுடைய முகத்திற்கு கண்ணியம் அளித்த அந்த இறைவன் மீது ஆணையாக! நான் உங்களில் எவரை விரும்பினாலும் பிடிக்க முடியும். உங்களில் எவர் என்னைப் பிடிக்க நினைத்தாலும் பிடிக்க முடியாது. நால்வரில் ஒருவர், நாங்களும் அவ்வாறு தான் நினைக்கிறோம் என்றார். பிறகு அந்த நால்வரும் திரும்பிச் சென்று விட்டனர். நான் என் இடத்தில் அமர்ந்திருந்தேன்.

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய குதிரைகள் முன்னால் வருவதைக் கண்டதும் முதலில் அவர்களில் அக்ரம் அஸதி வந்தார். பின்னே அபூ கதாதா அன்ஸாரி வந்தார். அதாரு பின் மித்தாத் பின் அஸ்வத் இந்தி வந்தார். நான் ஹஸ்ரத் அக்ரம் என்ற முஇரிஸ் உடைய குதிரையின் கயிற்றைப் பிடித்தேன். அவர்கள் நான்கு புறமும் ஓட ஆரம்பித்தனர். இங்கு சற்று குழப்பம் உள்ளது. எனது கருத்தின்படி அங்கு மற்றவர்களும் அங்கு அமர்ந்து உணவு உண்டு கொண்டிருந்தனார்கள்.

அவர்கள். வேறு சிலர் வருவதைக் கண்டு ஓடினர். அப்போது என்னை ஒருவர், அக்ரமே! என்று அழைத்தார் என்று கூறுகிறார். அதாவது ஹஸ்ரத் முஅர்ரிஸை அழைத்தார். நீ அவர்கள் உன்னை அழித்து விடாமல் தப்பித்துக் கொள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் சஹாபாக்கள் வந்து சேரும் வரை தப்பித்துக் கொள் என்றார். அதற்கு அவர், ஸல்மாவே! அல்லாஹ் மற்றும் இறுதி நாளின் மீது ஈமான் இருந்தால் ஜன்னத் உண்மை என்று நீ அறிவாய். நரகம்

உண்மையாயது. எனவே நீ எனக்கும் ஷஹாதத்திற்கும் நடுவில் தடையாக நிற்காதே என்றார். நான் அவரை விட்டு விட்டேன். அக்ரம் மற்றும் அப்துர் ரஹ்மான் இருவரும் செயலிழந்தனர். அவர் அப்துர் ரஹ்மானுடன் அவரது குதிரையையும் காயமுறச் செய்தார்.

அப்துர் ரஹ்மான் அக்ரமை அதாவது முஅர்ரிஸை ஈட்டியால் குத்தி ஷஹீதாக்கினார். அப்துர் ரஹ்மான் அவரது குதிரையில் ஏறி திரும்பினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் வந்த அபூ கதாதா தன் இடத்திற்கு திரும்புவதற்காக திரும்பிய போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். பின்னால் சென்று அப்துர் ரஹ்மானை அபூ கதாதா பிடித்து கொலை செய்தார். இவர்தான் முஅர்ரிஸை கொலை சென்று விட்டுச் சென்றவர்.

முஹம்மதின் முகத்திற்கு கண்ணியம் வழங்கிய இறைவன் மீது ஆணையாக! நான் ஓடிப்போய் அவர்களை பின்தொடர்ந்தேன். பிறகும் அவர்கள் பின்னால் சென்று கொண்டே இருந்தனர். எந்த அளவுக்கு என்றால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களுள் ஒருவரை அல்லது அவர்கள் வரும் புழுதியை அவர்கள் பார்த்தனர். அதாவது மிகவும் அருகில் வந்து விட்டனர். இந்நிலையில் சூரியன் மறையும் முன் மலை அடிவாரத்தில் சிறிது தண்ணீர் இருந்தது. அதனை மக்கள் ஸுகரப் என்று அழைத்தனர். அங்கு கொள்ளை அடித்துச் சென்றவர்கள் தண்ணீர் அருந்த விரும்பினர். அவர்கள் தாகம் கொண்டிருந்தனர்.

அப்போது அவர்கள் பின்னால் நான் துரத்திக் கொண்டு வருவதைப் பார்த்தனர். அங்கிருந்து விலகி ஓடினர். ஒரு துளி தண்ணீர் கூட குடிக்க முடியவில்லை. அங்கிருந்து சென்று விட்டனர். தமது இருப்பிடத்தை நோக்கி விரைவாக சென்றனர். நானும் ஓடினேன். நான் பின்னால் பார்த்த மனிதர் மறைந்து மறைந்து ஓடியவாறு பின்னால் நின்று விட்டார். அவரது தோள் எலும்பின் மீது நான் அம்பு விட்டேன்.

மேலும் அவர் கூறினார்: அன இப்னுல் அக்குஹ் வயம்வ யவ்முல் ரஉஅ. நான் அகுவின் மகனாவேன். இந்த நாள் இழிந்தவர்களின் அழிவுக்குரிய நாள் ஆகும். அகுவை அவரது தாயார் இழக்கட்டும். அதிகாலையின் அந்த அகுவா? எங்களை காலையில் காயமுறச் செய்தவரா? அவர்களில் ஒருவர் கூறினார். காலையில் வந்த அந்த அக்கு தான் நம் பின்னால் வருகிறார்.

அப்போது நான் கூறினேன். ஆம்! எனது உயிர் எதிரியே! அந்த காலையில் வந்த அக்கு தான் நான். அவர்கள் தமது இரு குதிரைகளை கூடாரத்திற்கு வெளியில் விட்டிருந்தேன். அவற்றை ஓட்டிக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றேன். எனக்கு இத்தண்ணீர் கலந்த பால் கிடைத்தது. ஒரு குவளையில் தண்ணீரும் தண்ணீர் கலந்த பாலும் கிடைத்தது.

நான் உளூ செய்தேன். குடித்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தேன். காலையில் நான் எந்த தண்ணீரை விட்டு அவர்களையும் அவர்களின் தலைவர்களையும் விரட்டினேனோ அந்த தண்ணீரின் அருகில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.

நான் பார்த்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் இணை வைப்பவர்கள் ஓட்டிச் சென்ற ஒட்டகங்களையும் பார்த்தேன். ஹஸ்ரத் பிலால் நான் பறித்து வந்த அந்த ஒட்டகங்களில் ஒன்றை அறுத்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக ஈரல் மற்றும் முதுகின் மேடு மாமிசத்தால் நிறைந்த பகுதியை தயார் செய்து கொண்டிருந்தார். நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதரே! உங்களுடன் வந்தவர்களில் 100 பேரை தேர்ந்தெடுத்து என்னோடு அனுப்ப அனுமதி வழங்கினால், அவர்களை பின்தொடர்ந்து கொலை செய்து விடுகிறேன். எந்த கோத்திரத்திற்காக களவாடிச் சென்றார்களோ அவர்களுக்கு தகவல் தெரிவிக்கவும் கூட யாரும் மிஞ்சமாட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளிப்படையாக சிரித்தார்கள். நெருப்பின் வெளிச்சத்தில் அவர்களின் அருருளுக்குரிய பற்கள் கூட தெரிந்தன.

அன்னார் கூறினார்கள்: சல்மாவே! நீர் அதனை செய்ய முடியும் என்று கருதுகிறீரா? அனைவரையும் அவர்கள் வீடு திரும்பும் முன் கொல்ல முடியுமா? நான் கூறினேன். ஆம்! உங்களுக்கு கண்ணியம் அளித்த இறைவன் மீது ஆணையாக!

அன்னார் கூறினார்கள்: அவர்கள் இப்போது கத்ஃபான் உடைய தலைநகருக்கு போய் விட்டார்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. இந்த வார்த்தை கூறப்பட்டுள்ளது. ஸல்மா பின் அக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இணைவைப்பவர்களை பின்தொடர அனுமதி கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யா இப்னு அக்கு மலகத்த ஃபஸ்ஜஹ் இப்னு அக்குவே! நீ வெற்றி பெற்ற பிறகு அவர்களைச் செல்ல விடும். கண்டும் காணாமல் விட்டு விடுங்கள். இனி பின்தொடர்ந்து என்ன பயன்? அவரது போருக்கு இது ஒரு முன்மாதிரியாகும். அவர் தனித்தனியாக சண்டையிட்டார்.

ஹஸ்ரத் முஹஸ்ஸஸ் வந்து அவர்களுடன் தாக்குதல் தொடுத்தார். அவர்கள் மறைந்து எவ்வாறு ஷஹீதாக்கினார்கள். முதலில் அவரது குதிரைகளைப் பிடித்து தள்ளினார்கள். தப்பி விட்டார். ஆனால் தாக்குதல் தொடுத்தார்கள். அவர் ஷஹீதாகி விட்டார். ஒன்று அவரது ஷஹாதத் சம்பவம். ஹஸ்ரத் முஅஸ்ஸஸ் உடைய ஷஹாதத் சம்பவம்.

இரண்டாவது அவரது வீரம் மற்றும் யுத்த முறை தெரிய வருகிறது. அக்கு எவ்வாறு அவர்களின் தலைவரிடமிருந்து பொருள்களைப் பறித்தார். இதில் முக்கிய விஷயம் என்னவென்றால், பொருள்களை திரும்பப் பெற்றதும் நான் பின்சென்று அவர்களை கொலை செய்கிறேன் என்று சொல்லியும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். செல்ல விடுங்கள்! பொருள் வந்து விட்டது. அவர்களை செல்ல விடுங்கள். இதுதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நடைமுறையாகும்.

ஏனெனில் அன்னாருக்கு கொலை செய்வது நோக்கமாக இருக்கவில்லை. அந்த தலைவர்களை தாக்கி அவர்கள் எடுத்துக் சென்ற பொருள்களை திரும்பி வாங்க வேண்டும். அனைவரும் காயமுற்று தப்பியோடும் நிலையில் எந்த யுத்தமோ கொலை செய்ய விரும்பவில்லை.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் அவர்களை விட்டு விடு. அவர்கள் ஓடிப் போகட்டும் என்றார்கள். அவர்களின் கத்பான் உடைய ஒரு மனிதர் வந்தார். அவர் கூறினார். அந்த மனிதர் அவர்களுக்காக ஒட்டகத்தை அறுத்தார். அதன் தோலை உரித்துக் கொண்டிருக்கும்போது புழுதி வந்தது. அவர்கள் வந்து விட்டனர் என்று கூறினார். உடனே அவர்கள் அங்கிருந்து ஓடி விட்டனர்.

விடிந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்று நம்முடைய மிகச் சிறந்த போர் வீரர் அபூ கதாதா ஆவார். கால்நடையாக சென்றவர்களுள் சிறந்தவர். சல்மா ஆவார். அதாவது கால்நடையாக சென்று எதிரிகளை பெரும் சிரமத்திற்குள்ளாக்கினார்.

மேலும் கூறுகிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் இரு பங்குகள் தந்தார்கள். ஒன்று வாகனத்தில் சென்றதாகும். ஒன்று கால்நடையாக சென்றதற்காகும். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா திரும்பினார்கள். என்னை ஒட்டகத்தில் தமக்குப் பின்னால் உட்கார வைத்தார்கள். அவ்வாறு நாங்கள் சென்றோம்.

அவர் கூறுகிறார்: எவராலும் முந்த முடியாத அளவுக்கு ஓடக்கூடிய ஒரு அன்ஸாரி கூறினார். மதீனா வரை ஓடுபவர் உண்டா? இப்போது யுத்தம் மற்றும் எதிரிகளுக்கு நெருக்கடி கொடுத்தல் ஆகியவற்றிற்கிடையில் சஹாபாக்கள் தமது மனமகிழ்ச்சிக்குரிய வேலைகளும் செய்தனர். ஒருவர் மற்றவருடன் சிறு சிறு அறைகூவல் விடுத்தனர். நேரப்போக்கிற்கு அவ்வாறு செய்தனர். எதிரிகளால் ஏற்பட்ட நிரந்தர மன அழுத்தம் குறைவதற்காக அவ்வாறு செய்தனர்.

எவ்வாறிருப்பினும் அவர் கூறினார்: என்னுடன் ஓட்டப்பந்தயம் வைக்க எவராது தயாரா? அவர் மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறியதும் ஒருவர் அவரை சீண்டினார். நீ எந்த கண்ணியத்திற்குரியவரையும் மதிக்க மாட்டாயா? எந்த பெரியவரையும் மதிக்க மாட்டாயா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தவிர எனக்கு வேறு எவர் மீதும் பயம் இல்லை என்று அவர் கூறினார்.

அப்போது நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதரே! எனது தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம். இம்மனிதருடன் என்னை ஓட விடுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சரி நீர் விரும்பினால் அவ்வாறு செய்யுங்கள் என்று கூறினார்கள். நான் அவரிடம் கூறினேன். சரி வாருங்கள். நான் எனது பாதங்களை திரும்பி குதித்தவாறு ஓடத் தொடங்கினேன். ஓரிருமுறை அவர் முன் ஓடினேன். எனது சக்தியை தக்க வைத்துக் கொண்டேன். மெதுவாக அவர் பின்னாலேயே ஓடினேன். பிறகு வேகமெடுத்தேன். அவரை சென்று சேர்ந்தேன். அவர் ஓடிக் கொண்டே இருந்தார். மதீனாவில் எல்லாரையும் விட வேகமாக ஓடுபவராக இருந்தார்.

அவர் கூறுகிறார்: நானும் வேகமெடுத்து அவரை பிடித்து விட்டேன். அவரது தோள் மீது ஒரு குத்து விட்டு அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ பின்தங்கினாய் என்று கூறினேன்.

ஓர் அறிவிப்பாளர் கூறுகிறார்: எனது கருத்தின்படி அவர் கூறினார். நான் மதீனா வரை அவருக்கு முன்னால் சென்றேன். பிறகு மூன்று நாள்கள் வரை தங்கினோம். அதன் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கைபருக்கு சென்றோம். ஆங்காங்கே தங்கினோம். பிறகு கைபருக்குச் சென்றோம்.

(சஹீஹ் முஸ்லிம் தொகுதி 9 பக்கம் 228–238 கிதாபுல் ஜிஹாது, ஹதீஸ் எண் 3358 – 2008 ஆம் ஆண்டு நூர் ஃபவுண்டேஷன் சார்பாக அச்சிடப்பட்டது & சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி, ஹதீண் எண் 4194)

திப்ரி வரலாற்று நூலில் போர்களைப் பற்றிய சில விபரங்களும் உள்ளன. ஹஸ்ரத் ஆஸிம் பின் அம்ர் பின் கதாதாவிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது. ஸிகரஸ் எதிரிகளிடம் சென்றபோது முதல் குதிரை ஹஸ்ரத் முஅஸ்ஸஸ் நுஸ்லா உடையது. அது தான் முதலில் சென்று சேர்ந்தது. அது பனூ அஸத் பின் ஹுஸைமாவில் இருந்தது.

ஹஸ்ரத் முஅஸ்ஸஸ் பின் நுஸ்லாவின் பெயர் அக்ரம் என்றும் கூறப்பட்டது. மேலும் அவர் கமீர் என்றும் கூறப்பட்டார். எதிரிகளின் தரப்பிலிருந்து கனவு மற்றும் ஆபத்து ஏற்பட்டு ஒன்று கூடுமாறு அறிவிப்பு செய்யப்பட்டதும் ஹஸ்ரத் மஹ்மூது பின் முஸ்லாமாவின் குதிரை அவரது தோட்டத்தில் கட்டப்பட்டுக் கிடந்தது. குதிரைகளின் கனைப்பு சப்தம் கேட்டதும் அவர் பாய்ந்து வந்தார். அவரது குதிரை ஒரு சிறந்த சுதாரிப்பான குதிரை.

பனூ அப்தே அஷ்அல் உடைய பெண்களில் சில பெண்கள் கட்டப்பட்ட குதிரையின் கனைப்பு சப்தத்தைக் கேட்டு ஹஸ்ரத் முஅஸ்ஸல் பின் நுஸ்லாவிடம் கூறினர். கமீரே இந்த குதிரை மீது சவாரி செய்வதற்கு உமக்கு சக்தி உள்ளதா? நீர் பார்க்கிற இந்த குதிரையின் மீது சவாரி செய்ய முடியுமா?

பிறகு அவர் முஸ்லிம்கள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆகியோரை சென்று சந்திக்க முடியுமா என்றதும் நான் நான் தயார் என்றேன். பிறகு அப்பெண்கள் அந்தக் குதிரையை தந்தார்கள். அவர் அதில் சென்றார். ஹஸ்ரத் முஅஸ்ஸல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து சேர்ந்தார். அன்னார் முன் வந்து நின்றார். ஹஸ்ரத் முஅஸ்ஸல் நுஸ்லா கூறினார்: சிறிய கூட்டமே நில்லுங்கள். முஹாஜிர் அன்ஸார் உமக்கு பின் உள்ளனர். அவர்களும் உங்களை வந்து சேரட்டும் என்றார்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: எதிரிகளிலிருந்து ஒருவர் அவர் மீது தாக்குதல் தொடுத்தார். அவரை ஷஹீதாக்கினார். அவரது குதிரை கட்டுப்பாட்டை இழந்து ஓடியது. எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. எந்த அளவுக்கு என்றால் அது பனூ அப்தே அஷ்அலின் பகுதிக்கு வந்து அது கட்டப்பட்டிருந்த அந்த கயிற்றிக்கு அருகில் வந்து நின்றது. அந்நாளில் முஸ்லிம்களில் அவரை தவிர வேறு எவரும் ஷஹீதாகவில்லை.

ஹஸ்ரத் மஹ்மூது மற்றும் சஹீம் முஸ்லிம் அறிவிப்பின்படி ஹஸ்ரத் முஹம்மது பின் முஸ்லமா என்ற சஹாபியின் குதிரையின் பெயர் ஸவல் லம்அ ஆகும். இன்னோர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் முஹஸஸல் பின் நஸ்லஹ் உகாஷா பின் மஹ்ஸன் உடைய குதிரையின் மிது ஷஹாதத்தின்போது சவாரி செய்து கொண்டிருந்தார். அந்த குதிரை ஜனாஹ் என்று அழைக்கப்பட்டது. மேலும் சில கால்நடைகள் எதிரிகளின் கையிலிருந்து விடுவிக்கப்பட்டன.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது இடத்திலிருந்து திரும்பினார்கள். ஸிகஸது உடைய போர் நடந்த மலையை அடைந்து தங்கினார்கள். அங்கேயே சஹாபாக்கள் அன்னாரது சமூகத்திற்கு வந்தனர். அங்கு அன்னார் ஒரு நாளும் ஓர் இரவும் தங்கினார்கள். சலமா பின் அக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! ஒரு நூறு பேரை என்னுடன் அனுப்பினால் மீதியுள்ள கால்நடைகளையும் எதிரிகளிடமிருந்து விடுவிப்பேன். அவர்களின் கழுத்தையும் வெட்டி விடுவேன் என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எங்கு செல்வீர்? இப்போது அவர்கள் அத்ஃபான் உடைய தண்ணீரை குடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நூறு நூறு பங்கு வைத்துக் கொடுத்து அவர்களின் உணவுக்காக ஒட்டகம் பகிர்ந்து அளித்தார்கள். சஹாபாக்கள் அவற்றை உணவுக்காக பயன்படுத்தினர். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா திரும்பினர்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 70 முஹ்ஸிர் பின் நஸ்லா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவர்களை தொடர்ந்து செல்லவில்லை. விட்டு விட்டார்கள். அவர்களும் ஹஸ்ரத் முஹஸ்ஸஸை மட்டும்தான் ஷஹீதாக்கி இருந்தார்கள். ஓர் அறிவிப்பின்படி குதிரை வைத்திருந்தவர்களுள் அனைவருக்கும் முதலில் இவர்களே ஷஹீதானார்கள். முதல் அறிவிப்பிலும் அவ்வாறே வந்தது.

பிறகு கூறவிருக்கிற சஹாபி **ஹஸ்ரத் சுவைத் பின் சஅத்** ஆவார். இவரை சுவைத் பின் ஹர்மலா என்று கூறப்படுகிறது. இவர் பெயர் சுவைத் பின் ஹர்மலா மற்றும் சுலைத் பின் ஹர்மலா என்றும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் சுவைத் பனூ அப்தே தார் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவரது தாயார் பெயர் ஹனீதத் ஆகும். ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர். பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் இவரை அபிஸீனியாவுக்கு இடம் பெயர்ந்தவர்களுள் ஒருவர் என்று கூறுகின்றனர்.

(தாரீக் திமஷ்க் தொகுதி 12 பக்கம் 117 பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 354 சுவைத் பின் ஹர்மலா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா அல்ஜுஸ்வுஸ் சாலிஸ் பக்கம் 368 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுவைத் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார். ஹிஜ்ரத்திற்குப் பிறகு இவர் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் அஜ்லானி வீட்டில் தங்கினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுவைத் மற்றும் ஹஸ்ரத் ஆயிஸ் பின் மாயிஸ் ஆகியோருக்கு இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் சுவைத் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா அறிவிக்கிறார்: ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வஃபாத்திற்கு ஒரு வருடம் முன்பு பஸரா நாட்டிலுள்ள சிரியாவின் ஒரு பகுதிக்கு வியாபாரத்திற்காகச் சென்றார்கள். அவர்களுடன் நுஃமான் மற்றும் சுவைத் பின் ஹர்மலா ஆகியோர் பயணம் செய்தனர். இருவரும் பத்ர் போரில் இருந்தார்கள். நுஃமான் பயண உணவுகளை பாதுகாத்து வைத்திருந்தார்கள். சுவைதுடைய இயல்பில் குறும்புத்தனம் இருந்தது.

அவர் நுஃமானிடம் கூறினார். எனக்கு உணவு வழங்குங்கள். உம்மிடம் வழியுணவு உள்ளது. எவரிடம் அது உள்ளதோ அவர் தர வேண்டும் என்றார். ஒட்டு மொத்த குழுவுக்கும் அவர் தான் பொறுப்பாளர் ஆவார். அவரிடம் உணவு தருமாறு சுவைத் கேட்டார். அவர் ஹஸ்ரத் அபூபக்கர் வராமல் தரமாட்டேன் என்றார்.

அவர் கூறினார்: எனக்கு உணவு தராவிட்டால் உமக்குக் கோபமூட்டுவேன். இதனைப் பற்றி முதலிலும் சிறிது கூறியிருந்தேன். ஹஸ்ரத் சுவீபத் செல்லும்போது ஒரு சமுதாயத்திடம், என்னிடம் ஒரு அடிமை இருக்கிறார்; வேண்டுமா? என்றார். அவர்கள் வேண்டும் என்றனர். சுவைத் அந்த கோத்திரத்திடம், அவர் தான் சுதந்திரமானவன் என்று கூறுவார்.

அவர் அவ்வாறு கூறுவதனால் எனது அடிமையை வீணாக விட்டு விடாதீர்கள் என்றார். அவர்கள், இல்லை. நான் அவரை உம்மிடமிருந்து வாங்க விரும்புகிறோம் என்று கூறி 10 பெண் ஒட்டகங்கள் தந்து வாங்கிக் கொண்டார். அவர்கள் நுஃமானிடம் வந்து அவரது கழுத்தில் தலைப்பாகை அல்லது கயிறு கொண்டு கட்டினார்.

நுஃமான் அவர்களிடம், இவர் கேலிக்கு கூறுகிறார். நான் சுதந்திரமானவன்; அடிமை இல்லை என்றார். அவர்கள், முதலிலேயே அவர் எங்களிடம் சொல்லியுள்ளார். நீர் இப்படித்தான் கூறுவீர் என்று கூறி பிடித்துக் கொண்டு சென்றனர். ஹஸ்ரத் அபூபக்கர் திரும்பி வந்ததும் அவர்கள் அவரைப் பற்றி கூறியதும் அன்னார் அவர்களிடம் சென்று அவர்களின் ஒட்டகங்களை திருப்பித் தந்து விட்டு நுஃமானை திரும்ப வாங்கினார்கள். இவர் சுதந்திரமானவர். அடிமையில்லை. அவர் நகைச்சுவைக்காக கூறியுள்ளார் என்று கூறினார்கள். இவ்வாறு நகைச்சுவையும் சஹாபாக்களிடம் இருந்தது. எவ்வாறிருப்பினும் அவர்கள் திரும்பி வந்தார்கள். நபி கரீம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அன்னாரிடம் கூறப்பட்டது.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் அவரிடம் இதுபற்றி ஓராண்டு வரை ரசனையாக கேட்டு வந்தார்கள்.

(சுனன் இப்னு மாஜா கிதாபுல் அதப் ஹதீஸ் எண் 3719 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 522 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் சிரித்தார்கள். இந்த நகைச்சுவை பிரபல்யமாகி விட்டது. ஒரு வருடம் வரை மேற்கண்ட சம்பவம் குறித்து சிறு வித்தியாசத்துடன் இவ்வாறும் காணப்படுகிறது. சில நூல்களில் விற்றவர் சுவைத் இல்லை. மாறாக நுஃமான் என்று எழுதப்பட்டுள்ளது.

சஹாபாக்களின் குறிப்புக்குப் பிறகு நான் சுருக்கமாக கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஓர் இல்ஹாம் வந்தது. அது ''وَسِّعْ مَكَانَكَ'' என்பதாகும். இந்த இல்ஹாம் பல்வேறு நேரங்களில் இறங்கியது. ''وَسِّعْ مَكَانَكَ'' என்ற இல்ஹாம் எனக்கு அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வந்தபோது எனது சபைக்கு இருவர் அல்லது மூன்று நபர்கள் வருவார்கள். வேறு எவரும் என்னை அறிந்திருக்கவில்லை என்று அன்னார் கூறுகிறார்கள்.

(சிராஜே முனீர், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 73)

பிறகு பல்வேறு நேரங்களில் மற்ற இல்ஹாமுடன் சேர்ந்து ''وَسِّعْ مَكَانَكَ'' இல்ஹாமும் சேர்ந்து இறங்கிக் கொண்டே இருந்தது. அதாவது உமது வீட்டை பரந்ததாக ஆக்குவாயாக. அத்துடன் மற்ற இல்ஹாமும் சேர்ந்து வந்தது.

இந்த நற்செய்தி, பல்வேறு சாயலில் அல்லாஹ்வின் அருளால் அவனது உதவி ஒத்தாசைகளை வழங்குவான் என்றும் வசதிகளை வழங்கும் என்றும் இதனை முழுமைப்படுத்துவான் என்றும் கூறியது. இதுவே நமது அனுபவமும் ஆகும். ஜமாஅத்தின் வரலாறும் தெரிவிக்கிறது. எவ்வளவு மகிமையுடன் அல்லாஹ் இந்த இல்ஹாமை முழுமை செய்தான். இப்பொழுதும் கூட நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான்.

நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எளிய அடிமைகள் நம்மை கூட இந்த இல்ஹாம் பல்வேறு நேரங்களில் நிறைவேறக் காணச் செய்தான்; செய்கிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒவ்வொரு இல்ஹாம் மற்றும் அல்லாஹ் அன்னாரிடம் எந்த விஷயத்திலாவது கட்டளை தர விரும்பினால் அது முன்னறிவிப்பாக கூறப்படுகின்றது.

உண்மையில் அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மார்க்கம் அதாவது இஸ்லாத்தின் பரவுதல் மற்றும் வளர்ச்சிக்குரிய முன்னறிவிப்பே ஆகும். அது அவர்களுக்குப் பிறகு கிலாஃபத் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தி உலகில் பரவும் என்ற முன்னறிவிப்பு ஆகும். எனவே ஒவ்வோர் அடியும் முன்னேற வேண்டும். அல்லது வளர்ச்சியைப் பார்க்க வேண்டும். இது அல்லாஹ்வின் திட்டமாகும். இதனை அல்லாஹ் இஸ்லாத்தை உலகில் பரப்புவதற்காக ஏற்படுத்தினான்.

இந்த முன்னுரையுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாமின் பக்கம் வருகிறேன். அதாவது ''وَسِّعْ مَكَانَكَ''. கிலாஃபத் யூ.கே –விற்கு ஹிஜ்ரத் ஆன பிறகு

பிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் ஜமாஅத் பரவுவதுடன் நமது கட்டிடங்களும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அல்லாஹ் நமக்கு இடங்களை வழங்கிக் கொண்டே இருக்கிறான்.

எந்த அளவுக்கு எனில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஹிஜ்ரத் செய்தவுடனேயே அல்லாஹ் அசாதாரண விரிவாக்கத்தின் காட்சியைக் காட்டினான். இஸ்லாமாபாத்தில் 25 ஏக்கர் நிலம் வாங்க ஜமாஅத்திற்கு வாய்ப்பு வழங்கினான். பிறகு மேலும் 6 ஏக்கர் கிடைத்தது. அங்கு மாநாடு நடந்தது. ஜமாஅத் பணியாளர்களுக்கு தங்குமிடமும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு தங்குமிடமும் உருவானது. கலீஃபத்துல் மஸீஹ் தங்குவதற்கு ஒரு பங்களாவும் சில அலுவலகங்களும் இருந்தன. மஸ்ஜிதும் கட்டப்பட்டது.

எனக்கு நினைவு உள்ளது. 1985 –ல் நான் இங்கு வந்தபோது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னிடம் குறிப்பாக கூறினார்கள். அல்லாஹ் நமக்கு தலைமையகம் அமைப்பதற்கு ஒரு நல்ல இடத்தை வழங்கியுள்ளான். அசல் சொற்கள் இதுவல்ல என்றாலும் கிட்டத்தட்ட இந்த சொற்களைத்தான் கூறினார்கள். எனக்கு திட நம்பிக்கை உண்டு. பிற சாட்சிகளும் கூட வெளிப்படுத்துகிறார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு இங்கு முறையான ஒரு தலைமையகம் உருவாக்கும் எண்ணம் இருந்தது.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் ஒவ்வொரு பணிக்கும் ஒரு நேரத்தை நிர்ணயித்துள்ளான். இப்போது அல்லாஹ் வாய்ப்பு வழங்கியுள்ளான். இஸ்லாமாபாத்தில் புதிய கட்டடம் உருவாகியுள்ளது. சில அலுவலகங்கள் நல்ல வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளன. முறைப்படி பள்ளியும் உருவாக்கப்பட்டுள்ளது. காலத்தின் கலீஃபாவுக்கு தங்குமிடமும் உருவாகியுள்ளது.

மேலும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கும் பணியாளர்களுக்கும் வீடுகள் உருவாகியுள்ளன. மேலும் உருவாகும். இலண்டனில் அலுவலகங்கள் தற்காலிகமாக வீடுகளுக்கு மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டன. நெருக்கடியான அறைகளில் மிகவும் சிரமத்துடன் நடத்தப்பட்டது. பணி மேம்பட்டதால் இடம் மிகவும் குறைவாக உணரப்பட்டது.

இது தவிர கவுன்ஸிலும் கூட ஆட்சேபணை செய்தது. இவை தங்குமிடமாக உருவாக்கப்பட்டவை. நீங்கள் அவற்றை அலுவலகமாக பயன்படுத்துகிறீர்கள். உடனே நிறுத்துங்கள் என்றது. பொதுவாக அவ்வப்போது அது கூச்சலிட்டுக் கொண்டிருந்தது. இப்போது இந்த புதிய கட்டடம் 3–4 அலுவலகங்கள் இங்கு வீடுகளிலிருந்து இன்ஷா அல்லாஹ் இஸ்லாமாபாத்திற்கு மாற்றப்படும்.

அதுபோன்று அல்லாஹ் இஸ்லாமாபாத்தில் பர்மிங்ஹம்மில் திட்டமிடப்பட்ட ஒரு இரண்டு மாடி கட்டமும் கூட ஜமாஅத்திற்கு கிடைக்கச் செய்தான். அதில் பிரஸ் செயல்படுகிறது. 2–3 மைல் தூரத்தில் இந்த கட்டடமும் ஒரு சில அலுவலகமும் உள்ளன. பிறகு இங்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவும் ஒரு கட்டடத்தை வாங்கும் வாய்ப்பு பெற்றுள்ளது. அதற்கு முன் மாநாட்டுத் திடலுக்காக ஹதீகத்துல் மஹ்தி கூட அருகிலேயே வாங்கும் வாய்ப்பு வழங்கினான். அது 200 ஐ விட அதிக ஏக்கர் ஆகும்.

பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யா இலண்டன் இங்கிருந்து மாறியது. அசாதாரணமான முறையில் குறைந்த விலையில் தற்போதைய இடத்தை ஜாமிஆவுக்காக அல்லாஹ் நல்ல சூழல் மற்றும் வசதிகளுடன் வழங்கினான். கிட்டத்தட்ட 30 ஏக்கர் நிலம் ஆகும். இவை அனைத்தும் இஸ்லாமாபாத்திலிருந்து 10–20 நிமிட தூரத்தில் உள்ளவை. இஸ்லாமாபாத் தற்போது திட்டமிட்டபடி பிளானுடன் முன்னர் வாங்கப்படவில்லை. அனைத்தும் அல்லாஹ் திட்டமாகும்.

இவை அனைத்தும் அருகருகே ஒன்றாக அமைந்து விட்டன. அல்லாஹ் தலைமையகத்துடன் சேர்த்து மற்ற வசதிகளையும் ஏற்பாடு செய்து விட்டான். ஜாமிஆ அருகில் இருப்பது அவசியமாகும். துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த எல்லா இடங்களிலும் எல்லா வசதிகளையும் ஒருங்கிணைத்து வழங்கியது எல்லா வகையிலும் அருளுக்குரியதாக அமையட்டுமாக.

நான் ஏற்கெனவே கூறியது போன்று கலீஃபத்துல் மஸீஹின் தங்குமிடம் மற்றும் அலுவலகங்கள் அங்கு உருவாக்கப்பட்டுள்ளன. பெரிய பள்ளிவாயில் உருவாகியுள்ளது. காரணம் இப்போது இலண்டனிலிருந்து சில நாட்களில் இஸ்லாமாபத் மாறி விடுவோம் – இன்ஷா அல்லாஹ். அங்கு மாறிய பிறகு எல்லா வகையிலும் அங்கு தங்குமிடம் பரக்கத்திற்குரியதாக அமைய துஆ செய்யுங்கள். அல்லாஹ் எப்போதும் அருள் புரிவானாக. அல்லாஹ் இஸ்லாமாபாத்தில் இருந்து இஸ்லாத்தின் தப்லீகை முன்னரை விட அதிகமாக விரிவுபடுத்துவானாக.

இங்கு இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஃபஸ்ல் மஸ்ஜிதின் அருகில் இருப்பவர்களுக்கு அஹ்மதிகளால் உருவான டிராஃபிக் மற்றும் பார்கிங் ஆல் நிறைய இடநெரிசல் ஏற்படுவதாக புகார் வருகிறது. எனவே புதிய இடத்தின் அருகில் இருப்பவர்களுக்கு தொழுகைக்காக இஸ்லாமாபாத் வருபவர்களால் எந்த புகாரும் வரக்கூடாது. அதற்கு இடம் கொடுக்காதீர்கள். அருகிலுள்ள மக்கள் வருவார்கள். டிராஃபிக்கின் கட்டுப்பாடுகளை எப்போதும் கவனத்தில் கொள்ளுங்கள்.

ஜுமுஆவை பொருத்தவரையில் நான் எப்போதும் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் நடத்துவேன். அமீர் சாஹிபிடம் கூறினேன். முறைப்படி ஒரு திட்டமிடு ஜமாஅத்திறகு கூறி விடுங்கள். எந்த ஜமாஅத் அல்லது மக்கள் இஸ்லாமாபாத்தில் ஜுமுஆ தொழுவார்களோ அவர்களும் சுற்று வட்டாரத்து ஜமாஅத்துகளும் இஸ்லாமாபாத்தில் ஜுமுஆ தொழலாம். எந்தெந்த பகுதிகளுக்கு எந்தெந்த பகுதி செல்ல வேண்டும் என்று பகிர்ந்து கொடுக்கப்படும். இஸ்லாமாபாத்திலிருந்து 20 மைல் தூரத்தில் இருப்பவர்கள் அங்கேயே ஜுமுஆ தொழலாம். அங்கு ஜுமுஆ நடக்கும்.

எவ்வாறிருப்பினும் அதன் விபரம் அமீர் சாஹிபிடமிருந்து அந்தந்த ஜமாஅத்துகளுக்கு கிடைக்கும். 20 மைலுக்கு அப்பால் உள்ள மக்களுக்கு எந்தெந்த ஜமாஅத்திற்கு செல்ல வேண்டும் என்பது முறைப்படுத்தப்படும். எவ்வாறிப்பினும் மீண்டும் நான் இதையே கூறுகிறேன். துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த திட்டத்தையும், அங்கு இடம் பெயர்தலையும் எல்லா வகையிலும் பரக்கத்திற்குரியதாக ஆக்குவானாக.


**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் 18 மே 2018 அன்று ஆற்றிய குத்பா ஜுமுஆ பேருரையிலிருந்து...**

நோன்பு வைத்திருந்தும் கூட நம்மிடம் தற்பெருமை இருக்கும் எனில், நமது பணிகளில், நாம் கூறும் விஷயங்களில் நமக்கு அதிகமான பெருமை இருக்கும் எனில், சுயநலம் பேணும் பழக்கம் இருக்கும் எனில், மக்களால் பாராட்டப்பட வேண்டும் என்ற விருப்பம் இருக்கும் எனில், தமக்கு கீழுள்ளவர்கள் தம்மை வரவேற்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், எவராவது பாராட்டி அதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தால் அல்லது அதற்காக விரும்பினால் அது இறையச்சம் கிடையாது

**:.பைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அல்லாஹ், ரஸூலின் மீது அன்பு கொண்டிருக்கின்ற இந்த நபரை முஸ்லிம்கள் அடையாளங்கண்டு கொள்ளச் செய்வானாக! மேலும் முஸ்லிம்கள் கெட்ட ஆலிம்களின் அச்சத்தின் காரணமாக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ரஸூலின் மீது அன்பு கொண்டிருக்கின்ற இந்த நபரை மறுத்ததால் முஸ்லிம்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகாமல் இருப்பார்களாக.

அதற்குப் பிறகு ஹுஸுர் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியம், அந்தஸ்து தொடர்பாகக் கூறியுள்ள மேற்கோள்களை எடுத்துக் கூறியவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒவ்வொரு எழுத்தும் அன்னாரை காஃபிர் என்று கூறக்கூடியாரின் முகத்தில் அறையக்கூடியதாக இருக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மை என்னவென்றால், அனைத்து நபிமார்களையும் விட சிறந்தவர் யார் என்றால் அவர் மகத்துவமிக்க நபியாவார். அதாவது அந்த நபரின் கைகளினால் குழப்பம் நிறைந்த உலகத்தில் சீர்திருத்தம் ஏற்பட்டது. அவர் தொலைந்துபோன ஏகத்துவத்தை மீண்டும் உலகில் நிலைநாட்டினார். அவர் அனைத்து பொய்யான மார்க்கங்களையும் ஆதாரங்கள் மூலமாக தோற்கடித்து ஒவ்வொரு வழிகேட்டிற்குறிய சந்தேகங்களையும் அழித்தார். மேலும் இரட்சிப்பைப் பெறுவதற்குரிய உண்மையான வழிகளின் போதனைகளை வழங்கினார்.

பெருமானார் (ஸல்) அவர்களது உண்மை மற்றும் அன்னாரின் மேன்மை தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

முழு உலகிலும் இணை வைத்தல் மற்றும் வழிகேடு மற்றும் படைப்பினங்களை வணங்குவது ஆகியவை பரவி இருந்த காலத்தில்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். மேலும் அனைத்து மக்களும் உண்மையைக் கைவிட்டு விட்டனர். மேலும் நேர்வழியை மறந்து ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாக தமக்கென்று பித்அத்தான வழிகளை மேற்கொண்டனர்.

அரபு நாட்டில் சிலை வணக்கம் மேலோங்கி இருந்தது. ஃபாரிஸில் நெருப்பை வணங்குவது மேலோங்கிக் காணப்பட்டது. இந்தியாவில் சிலை வணக்கம் மட்டுமின்றி நூற்றுக்கணக்கான படைப்பினங்களை வணங்கி வந்தனர். இவை பரவி இருந்தது....

ஆக இத்தகைய நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றியது அந்த காலமே ஒரு சீர்திருத்தவாதியின் வருகை விரும்பியது. மேலும் வழிகாட்டக்கூடிய ஒருவரின் அவசியம் இருந்தது. பிறகு அவர் தோன்றி ஒரு உலகத்தையே ஏகத்துவம் மற்றும் நற்செயல்களின் மூலமாக ஒளியூட்டினார். மேலும் இணை வைத்தல் மற்றும் படைப்பினங்களை வணங்குதல் ஆகியவற்றை ஒழிப்பது என்பது நிச்சயமாக பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனது உண்மையான ரஸூல் மற்றும் அனைத்து நபிமார்களையும் விடச் சிறந்தவர் என்பதற்காக வெளிப்படையான ஆதாரமாகும்.

ஹுஸூர் அவர்கள் துஆ செய்தவாறு கூறினார்கள்: அல்லாஹ் நம்மை உண்மையான முறையில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸவலாத் ஓதக்கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் அல்லாஹ் வாக்குறுதியளித்துள்ள வெற்றிகளைப் பார்ப்பவர்களாகவும், அதிலிருந்து பங்கு பெறுபவர்களாகவும் நம்மை ஆக்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த வருடம் முடிவடைய இருக்கின்றது. சில நாடுகளில் 24 மணி நேரமும், சில நாடுகளில் இரண்டு பகலும், இரண்டு இரவும் பாக்கியுள்ளது. இந்தக் கடைசி நாட்களையும் தரூதினால் நிரப்புங்கள். மேலும் புதிய வருடத்தையும் தரூதோடு துவக்குங்கள். இதன் மூலம் பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாக நமக்குக் கிடைக்க இருக்கின்ற அருட்களை நாம் விரைவாக பெறக் கூடியவர்களாக ஆவோமாக. அல்லாஹ் இதற்கான நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக. மேலும் ஒவ்வொரு எதிர்ப்பிலிருந்தும் நம்மைப் பாதுகாப்பானாக. மேலும் ஒவ்வொரு தீங்கையும் அவர்கள் பக்கமே திருப்புவானாக. ஆமீன்.

அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் உருக்கமான நிறைவு துஆவை செய்து வைத்தார்கள். துஆவிற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் ஆண்டு மாநாட்டிற்கு வந்திருப்பவர்களின் எண்ணிக்கை தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்: காதியானில் தற்போது 48 நாடுகளிலிருந்து மொத்தம் 18864 நபர்களும், லண்டனிலிருந்தபடியே 5345 உறுப்பினர்களும் இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

அதற்குப் பிறகு காதியானிலுள்ள மாநாட்டு அரங்கில் பல்வேறு தரானாக்கள் படித்துக் காட்டப்பட்டன. அத்துடன் மூன்று நாட்கள் நடைபெற்ற அருள்கள் நிறைந்த இந்த மாநாடு அதன் நிறைவை எட்டியது. அல்லாஹ் இந்த அருளுக்குரிய நாட்களை மீண்டும் மீண்டும் நமது வாழ்க்கையில் கொண்டு வருவானாக. ஆமீன்

## பெண்களுக்கான மாநாடு

காதியான் ஆண்டு மாநாட்டின் நாட்களில் ஒவ்வொரு வருடமும் இரண்டாவது நாளில் இரண்டாவது அமர்வில் பெண்களுக்கென்று தனியாக மாநாடு நடைபெற்று வருகின்றது.

இந்த அமர்விற்கு மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் (முன்னாள் ரப்வாவின் நாஸிர் ஆலா) அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதி அமத்துல் குத்தூஸ் பேகம் சாஹிபா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மதிப்பிற்குரிய நய்யரா தன்வீர் சாஹிபா அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். மதிப்பிற்குரிய தம்ஹீதா உமர் சாஹிபா அவர்கள் இந்த வசனங்களின் மொழியாக்கத்தைப் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பிற்கு மதிப்பிற்குரிய ராஷிதா தன்வீர் சாஹிபா அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உருது கவிதையைப் பாடினார்கள்.

இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை ‘‘சாஹிப் ஸாதி அம்மத்துல் ஹபீஸ் பேகம் சாஹிபா (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு’’ என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய தய்யிபா ரஸாக் சாஹிபா (தலைவி, லஜ்னா இமாயில்லாஹ் ஹைதராபாத்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அதற்குப் பிற்கு மதிப்பிற்குரிய குர்ரத்துல் அய்ன் சாஹிபா அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உருது கவிதையைப் பாடினார்கள்.

பிறகு இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய புஷ்ரா பாஷா சாஹிபா அவர்கள் (இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவி) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்களின் சொற்பொழிவின் தலைப்பு ‘‘ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல்

மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் லஜ்னா இமாயில்லாஹ்வின் பொறுப்புகள்'' என்பதாகும்.

இந்தச் சொற்பொழிவுக்குப் பிறகு லஜ்னா இமாயில்லாஹ் கேரளாவைச் சார்ந்த சகோதரிகள் மற்றும் காதியானின் நாஸிராத் உறுப்பினர்கள் தரானா படித்தார்கள்.

மாநாட்டின் இறுதியில் கூட்டத்தின் தலைவி அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய குழந்தைகள் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு மாநாட்டில் கலந்து கொண்டவர்களிடம் தம்மை அறிமுகப்படுத்தினார்கள். துஆவுடன் இந்த அமர்வு நிறைவுற்றது.

### துறைகளும் தங்குமிடங்களும்

இவ்வருடம் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மற்றும் விருந்தினர்களைத் தங்க வைப்பது, உணவிற்கான ஏற்பாட்டைச் செய்வது மற்றும் ஏனைய தேவைகளைக் கருத்தில் கொண்டவாறு 31 துறைகளும் 25 தங்குமிடங்களும் உருவாக்கப்பட்டன. 4 லங்கர் கானா செயல்பட்டு வந்தது. காதியானின் எல்லாப் பகுதிகளிலும் வீடுகளில் தங்குகின்ற விருந்தினர்களுக்காக 7 இடங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உணவு பரிமாறுவதற்கான ஏற்பாடு செய்யபட்டிருந்தது.

### படைப்பின சேவைத் துறை

காதியான் ஆண்டு மாநாட்டின் துறைகளில் ஒரு முக்கிய துறையாக படைப்பின சேவைத் துறை இருந்து வருகின்றது. அதன் கீழ் அடிப்படையான விஷயங்களை மாநாட்டின் அமைதி மற்றும் ஒழுங்குமுறையைப் பேண வைப்பதுடன் பாதுகாப்பிற்கான டியூட்டியும் அதன் மூலமாகவே கண்காணிக்கப்படுகிறது. இந்த வருடம் இந்த துறையின் கீழ் டியூட்டி கொடுப்பதற்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 688 தன்னார்வத் தொண்டர்களான காதிம்களும் அன்ஸார்களின் இரண்டாவது அணியிலுள்ள 29 அன்ஸார்களும் வருகை தந்திருந்தனர்.

இந்த துறையின் கீழ் பணியாற்றுவதற்காக ஆண்டு மாநாட்டிற்கு வருகை தந்திருந்த ஒவ்வொரு விருந்தினருக்கும் அவர்களது புகைப்படத்துடன் கூடிய மாநாட்டு Registration Card குறிப்பிட்ட Bar Code உடன் வழங்கப்பட்டது. தொழுகை நேரங்களில் தாருல் மஸீஹின் வழிப்பாதைகளில் மற்றும் முஹல்லாக்களின் தெருக்களில் ஒழுங்குமுறையையும் கட்டுக்கோப்பையும் நிலைநிறுத்துவதற்காக காதிம்கள் டியூட்டி கொடுத்தனர்.

தாருல் மஸீஹ், பெஹஸ்தி மக்பரா, ஆண்டு மாநாட்டுத் திடல், காதியானில் உள்ள அனைத்து தலைமையகப் பள்ளிவாயில்கள் மற்றும் அனைத்து தங்குமிடங்களிலும் காதிம்களுக்கு நிரந்தரமான டியூட்டிகள் கொடுக்கப்பட்டு அவர்கள் அங்கு தமது கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றினர். இவ்வாறே அல்குர்ஆன் கண்காட்சி, அந்நூர் கண்காட்சி, மக்ஸனே தஸாவீர், Humanity First கண்காட்சி ஆகியவை நடைபெற்ற இடங்களிலும் அதிகமாக விருந்தினர்கள் வந்து போயிருந்ததால் அங்கும் காதிம்கள் நிரந்தரமாக டியூட்டி கொடுத்து வந்தனர். இவ்வாறே இந்த வருடம் லூதியானவிலுள்ள தாருல் பைஅத், ஹோஸ்யார்பூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனிமையில் துஆ செய்து வந்த வீடு போன்ற புனித இடங்களிலும் கூட காதிம்கள் டியூட்டியில் அமர்த்தப்பட்டிருந்தனர். இந்த துறையின் கீழ் பாகிஸ்தான் பார்டர், இரயில் நிலையம், விமான நிலையம் போன்ற இடங்களிலும் கூட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் வசதியைக் கருத்தில் கொண்டவாறு காதிம்கள் டியூட்டியில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

Lost and Found மற்றும் அறிவிப்புகள் செய்வதற்கான ஓர் அலுவலகமும் நிறுவப்பட்டிருந்தது. இதன் செயல்பாட்டின் கீழ் விருந்தினர்களின் தொலைந்து போன பொருள்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு திரும்பக் கொடுக்கப்பட்டது. First Aid மற்றும் Emergency –ற்கான அலுவலகம் நிறுவப்பட்டது. இந்த அலுவலகங்களின் கீழ் 24 மணி நேரமும் விருந்தினர்களுக்கு வசதி செய்து தருவதற்காகவும் அவர்களின் சுகத்தைக் கருத்தில் கொண்டவாறும் காதிம்கள் மிகவும் உழைத்தவாறு டியுட்டி கொடுத்து வந்தனர்.

### தர்பிய்யத் துறை

காதியான் ஆண்டு மாநாட்டின் நாட்களில் 22 டிசம்பர் 2018 முதல் 2 ஜனவரி 2019 வரை மஸ்ஜிது அக்ஸா, மஸ்ஜிது முபாரக், முஹல்லா தாருல் அன்வாரிலுள்ள மஸ்ஜிது அன்வார் ஆகிய பள்ளிவாயில்களில் ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை நிறைவேற்றப்பட்டு வந்தது.

இவ்வாறே காதியானிலுள்ள முஹல்லாக்களில் உள்ள ஏனைய 9 பள்ளிவாயில்களிலும் ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகைக்கான ஏற்பாடு இருந்தது. மேலும், எல்லா பள்ளிவாயில்களிலும் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு தஃப்ஸீரே கபீரிலிருந்து தர்ஸிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. தஹஜ்ஜுத் தொழுகைக்காக ஜமாஅத் சகோதரர்கள் ஒலிபெருக்கியின் மூலமாக ஸலவாத் ஓதியவாறு எழுப்புவதற்கான ஏற்பாடும் இருந்தது.

இந்த துறையின் ஏற்பாட்டின் கீழ் காதியானிலுள்ள பல்வேறு தெருக்களிலும் சாலைகளிலும் ஜமாஅத்தின் போதனைகள் மற்றும் தர்பிய்யத் தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்டிருந்த அழகிய பேனர்கள் கட்டப்பட்டிருந்தன. அது தவிர உருது மற்றும் ஆங்கில மொழியில் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகள் அடங்கியுள்ள Booklet –ம் வெளியிடப்பட்டிருந்தது. அவற்றில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஆண்டு மாநாடு தொடர்பாகக் கூறி இருந்த பொன்னான போதனைகளும் குறிப்பிடப்பட்டிருந்தது.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்: 1800 425 40000**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றி பெற்றனர். அவர்கள் தங்கள் தொழுகைகளில் பணிவுடன் உள்ளனர். மேலும் அவர்கள் வீணானவற்றிலிருந்து விலகியிருக்கின்றனர். மேலும் அவர்கள் ஸக்காத்தை(த் தவறாமல்) செலுத்துகின்றனர். மேலும் அவர்கள் தங்கள் கற்பைக் காத்துக் கொள்கின்றனர். (23:2–6)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 16 May 2019 Issue No. 20

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு

தஹ்ரீகே ஜதீதின் தோற்றுனர் ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு பற்றி இவ்வாறு கூறினார்கள்:

"நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்பினால் தஹ்ரீகே ஜதீதிற்கேற்ப செயல்படுங்கள். தஹ்ரீகே ஜதீதிலிருந்து பயன் பெற விரும்பினால் நோன்புகளிலிருந்து சரியான பயனைப் பெற வேண்டும். தஹ்ரீகே ஜதீது என்பது எளிமையான வாழ்க்கையை வாழ்வதும் உழைப்புடனும் கஷ்டங்களைச் சகிப்பதும் தியாகம் செய்வதற்கு தன்னைத்தானே பழக்கப்படுத்திக் கொள்வதும் ஆகும். இந்தப் பாடத்தை உங்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே ரமலான் வந்திருக்கின்றது. எனவே, எந்த நோக்கத்திற்காக ரமலான் வந்துள்ளதோ, அந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள்..... ஒவ்வொரு நபரும் அவரது ரமலான் தஹ்ரீகே ஜதீதுடையதாகவும் அவரது தஹ்ரீகே ஜதீது ரமலானுடையதாகவும் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ரமலான் நமது நஃப்ஸை அழிக்கக் கூடியதாகவும் தஹ்ரீகே ஜதீது நமது ஆன்மாவிற்கு புத்துணர்வூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

எனவே, நான் ரமலானிலிருந்து பயனடையுங்கள் என்று கூறும்போது நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ரமலானின் ஒளியில் புரிந்து கொள்ளுங்கள் என்பதையே உண்மையில் நான் உங்களுக்குப் புரிய வைத்துள்ளேன். தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறும்போது வேறு சொற்களில் நான் உங்களுக்கு நீங்கள் எல்லா நிலையிலும் ரமலானின் நிலைமையை உங்களிடம் ஏற்படுத்துங்கள் என்றே கூறுகின்றேன். சரியான தியாகத்தை தொடர்ந்து செய்கின்ற பழக்கத்தை உங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ரமலான் உண்மையான தியாகம் இல்லாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது ரமலான் அல்ல. மேலும் எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவிற்கு புத்துணர்ச்சியூட்டாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல."

(ஜுமுஆ குத்பா 4 நவம்பர் 1938)

இது தொடர்பாக 11 நவம்பர் 1938 அன்று நிகழ்த்திய குத்பா பேருரையின் இறுதியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்திடம் தஹ்ரீகே ஜதீதிற்காக சந்தா செலுத்துபவருக்குக் குறிப்பாக துஆ செய்யுமாறு வேண்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

"ரமலானின் இறுதிப் பத்து நாட்கள் வரவிருக்கின்றது. இந்த நாட்களை தஹ்ரீகே ஜதீது தொடர்பாக செய்யப்பட்டுள்ள கடந்த காலத் தியாகங்களுக்காக நன்றி செலுத்துவதற்கும் இனி வருங்காலத்தில் ஆற்றலைப் பெறுவதற்காகவும் செலவிடுங்கள். எவர்களுக்கு கடந்த வருடங்களில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றதோ அவர் இதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள். துஆ செய்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ்விடம் தியாகம் செய்கின்ற ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்ய வேண்டும். அதாவது, மார்க்கத்தின் எழுச்சிக்காகவும் இயக்கத்தின் வலிமைக்காகவும் செய்த தியாகத்தின் விளைவாக அல்லாஹ் அவர் மீது தனது அருளையும் கருணையையும் இறக்க வேண்டும். எத்தகைய கலப்பற்ற மனத்தூய்மையுடனும் அன்புடனும் அவர் இறைவனின் வழியில் தியாகம் செய்தாரோ அதற்கேற்ப அவர் மீது தனது அன்பையும் அருள்களையும் இறக்குவாயாக! ஆமீன் என்று துஆ செய்ய வேண்டும்."

(அல் ஃபஸ்ல் 15 நவம்பர் 1938, பக்கம் 4)

29 நவம்பர் 1938 ஆம் ஆண்டு காதியானிலிருந்து வெளிவந்த அல்ஃபஸல் தினப் பத்திரிகையில் வெளிவந்துள்ள அறிவிப்பிற்கேற்ப ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் ஆரம்பத்திலிருந்தே இதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதாவது அவர்கள் எப்போதும் ரமலானின் முதல் பதினைந்து நாட்களுக்குள் தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக அவர்கள் செய்திருந்த வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்தியவாறு அல்லாஹ்வின் அருள்களையும் பரக்கத்துகளையும் ஈர்ப்பதற்கு முயற்சி செய்கின்றனர்.

எனவே, தஹ்ரீகே ஜதீதிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற அனைவரிடமும் அவர்கள் தங்களது மகத்தான ஜமாஅத்தின் மரபுகளை நிலைத்து நிற்கும்படி செய்தவாறு அருளுக்குரிய ரமலானின் 20 –வது நாள் அதாவது மே 26 ஆம் தேதிக்குள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை முழுமையாகச் செலுத்தி ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களிலிருந்து முழுமையான பங்கைப் பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

*(வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது, காதியான்)*

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இஸ்லாம் உயிர்பெறுவதற்கு நம்மிடமிருந்து ஒரு பரிகாரத்தை வேண்டுகிறது. அது என்ன? அது அதன் வழியிலேயே நாம் மரணிப்பதாகும். இந்த தியாகத்தின் மீது தான் இஸ்லாத்தின் வாழ்வு, முஸ்லிம்களின் வாழ்வு, உயிருள்ள இறைவனின் தோற்றம் யாவும் சார்ந்து நிற்கின்றன. இதன் மறுபெயர் தான் இஸ்லாம். இந்த இஸ்லாத்தை உயிர்பிக்கவே இறைவன் இப்போது விரும்புகின்றான்". (ரூஹானி கஸாயின், பாகம் 3, ஃபதஹ் இஸ்லாம் பக்கம் 6–11 வரை)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad